# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
******

**ஆணை எண்: 89/பேரூ/2024**
**நாள் : 24.12.2024**

திரு. இரா. இராமசுப்பிரமணியன்,
புனல்வேலி, விருதுநகர் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
செட்டியார்பட்டி பேரூராட்சி,
விருதுநகர் மாவட்டம். – எதிர் மனுதாரர்

விருதுநகர் மாவட்டம், செட்டியார்பட்டி பேரூராட்சி, இராஜபாளையம் வட்டம், புனல்வேலி, முருகன் ஆரம்ப பாடசாலை தெரு எண். 3–இ, என்ற முகவரியில் வசிக்கும் திரு. இரா. இராமசுப்பிரமணியன் என்பவரின் 02.08.2024 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 05.08.2024 அன்று பெறப்பட்டு, 89/பேரூ/2024 என்ற எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

விருதுநகர் மாவட்டம், செட்டியார்பட்டி பேரூராட்சி, இராஜபாளையம் வட்டம், புனல்வேலி, முருகன் ஆரம்ப பாடசாலை தெரு எண். 3–இ, என்ற முகவரியில் வசிக்கும் திரு. இரா. இராமசுப்பிரமணியன் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார் :-

> "எனது வீட்டுடன் சேர்ந்து பின்புறம் 16 வாடகை வீடுகளும், அருள்மிகு பேச்சியம்மன் கோவிலும் உள்ளன. அந்த வீடுகளுக்கும் கோவிலுக்கும் அரசு பொதுப்பாதை வழியாகத்தான் சென்று வரவேண்டியுள்ளது. அதன் அருகில் குடியிருக்கும் திரு. பாலகிருஷ்ணன் என்பவர், ஏணிப்படி, வாசற்படி மற்றும் சன்சைடு கட்டி ஆக்கிரமித்திருந்தார். மேற்படி ஆக்கிரமிப்புக்களை ஏழு ஆண்டுகளாக அகற்ற போராடி வருவாய் துறையினரின் நடவடிக்கைகளால் 15.12.2022 அன்று ஆக்கிரமித்துள்ள ஏணிப்படி, வாசற்படிகளை மட்டும் அகற்றினார்கள், ஆனால் சன்சைடை மட்டும் அகற்றவில்லை. ஆக்கிரமிப்பு சன்சைடை மட்டும் அகற்றாத காரணத்தினால் வருவாய்த் துறையினரை அடிக்கடி நடவடிக்கை எடுக்க கோரியதில் இராஜபாளையம் வட்டாட்சியரின் நடவடிக்கையின்படி சன்சைடை அகற்ற 25.07.2023 நாளிட்ட நடவடிக்கையில் உத்தரவிட்டுள்ளார். மேலும் செட்டியார்பட்டி பேரூராட்சி

செயல் அலுவலரும் மேற்படி இடத்தில் ஆக்கிரமிப்பு உறுதி செய்யப்பட்டால், உடன் ஆக்கிரமிப்பு அகற்றப்படும் என 23.01.2024 நாளிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளார். ஆனால் 27.05.2024 அன்று மறு அளவீடு செய்து சன்சைடு ஆக்கிரமிப்பை உறுதி செய்த சர்வேயரின் உத்தரவின்படியும் விடுபட்ட சன்சைடு ஆக்கிரமிப்பை அகற்றவில்லை'' என தெரிவித்துள்ளார்.

2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 13.08.2024 நாளிட்ட அறிவிப்பு மூலம் செட்டியார்பட்டி பேரூராட்சி செயல் அலுவலரை கோரப்பட்டது.

3) செட்டியார்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் தனது 09.10.2024 நாளிட்ட கடிதத்தில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார் :-

"விருதுநகர் மாவட்டம், செட்டியார்பட்டி பேரூராட்சி, புனல்வேலி, முருகன் ஆரம்ப பாடசாலை தெருவில் புல எண்.438/27ல் உள்ள சந்தில் திரு. பாலகிருஷ்ணன் என்பவரால் கட்டப்பட்ட ஏணிப்படி, வாசற்படி மற்றும் சன்சைடு ஆகிய ஆக்கிரமிப்புகளை அகற்ற செட்டியார்பட்டி பேரூராட்சி செயல் அலுவலரால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதில், ஏணிப்படி மற்றும் வாசற்படி ஆகியவைகள் அகற்றப்பட்ட நிலையில் சன்சைடு மட்டும் அகற்றப்படவில்லை என திரு. இராமசுப்பிரமணியன் என்பவரது மனைவி திருமதி. மாடத்தி என்பவரது புகார் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து இராஜபாளையம் வட்ட ஆக்கிரமிப்பு அகற்றும் குழுத்தலைவர் மற்றும் வட்டாட்சியர் அவர்களின் செயல்முறையின்படி புல எண்.438/27ல் அரசு புறம்போக்கு பாதையில் 1 ச.மீ. பரப்பளவில் உள்ள ஆக்கிரமிப்பினை அகற்ற உத்தரவிடப்பட்டுள்ளது. இந்நிலையில் திருமதி. மாடத்தி என்பவரது மனுவில் மேற்காணும் ஆக்கிரமிப்பினை அகற்றக் கோரி வலியுறுத்தப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து மீள அளவை செய்யப்பட்டு, குறுவட்ட அளவையரின் 27.05.2024 நாளிட்ட அளவறிக்கையின் படி நில புல எண்.428/27ல் கிழமேல் 0.2 மீட்டரும், தென்வடல் 3.4 மீட்டரும் ஆக 0.68 ச.மீட்டர் மட்டுமே ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதாகவும், மேற்படி ஆக்கிரமிப்பானது பொது மக்களின் வண்டிப் போக்குவரத்திற்கு இடையூறு இல்லாமல் அந்தரத்தில் உள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து செட்டியார்பட்டி பேரூராட்சி நிர்வாகம் சார்பில் 30.09.2024 அன்று மேற்காணும் ஆக்கிரமிப்பு அகற்றுதல் பணி நடைபெறவிருந்த நிலையில் ஆக்கிரமிப்பாளரின் கோரிக்கையின்படி, நில அளவை செய்து அறிக்கை சமர்ப்பித்திட இராஜபாளையம் வட்டாட்சியர் அவர்களால், கிராம நிர்வாக அலுவலர், வருவாய் ஆய்வாளர் மற்றும் குறுவட்ட நில அளவையர் ஆகியோர்களுக்கு அளவறிக்கை சமர்ப்பிக்க கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. தற்போதைய நிலையில் இப்பொருள் தொடர்பான அளவறிக்கை ஏதும் நாளது தேதி வரை பெறப்படவில்லை என்ற விபரத்தினை பணிந்து தெரிவித்துக் கொள்கிறேன்.

எனவே அளவறிக்கை கிடைக்கப்பெற்ற பின் அதன் அடிப்படையில் ஆக்கிரமிப்பு இருப்பது கண்டறியப்பட்டால் அதனை உடன் அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விபர அறிக்கையினை இதன் வழி சமர்ப்பித்துக் கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

4) மனுதாரரும் மற்றும் எதிர்மனுதாரரானஅய்யம்பாளையம் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரும் 2611.2024 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 07.11.2024 தேதியிட்ட அழைப்பாணைகள் இம்முறைமன்றத்தால் அனுப்பப்பட்டன.

5) மனுதாரர் திரு. இரா. இராமசுப்பிரமணியன் என்பவர் 2611.2024 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார் :-

"விருதுநகர் மாவட்டம், செட்டியார்பட்டி பேரூராட்சிக்குட்பட்ட செட்டியார்பட்டி கிராம புல எண்.438/27ல் அமைந்துள்ள பொதுப் பாதையினை ஆக்கிரமித்து திரு.பாலகிருஷ்ணன் என்பவர் கட்டியிருந்த வாசற்படி, ஏணிப்படி மற்றும் சன்சைடு ஆக்கிரமிப்புகளை அகற்றும் பொருட்டு 18.11.2022 நாளிட்ட இராஜபாளையம் வட்டாட்சியரின் செயல்முறை ஆணைப்படி வாசற்படி, ஏணிப்படி ஆக்கிரமிப்பு மட்டும் அகற்றப்பட்டு, சன்சைடு அகற்றப்படாமல் உள்ளது. ஆக்கிரமிப்பாளர் திரு. பாலகிருஷ்ணன் என்பவர் 26.12.2019–க்குள் மறு ஏற்பாடு செய்து ஆக்கிரமிப்புகளை அகற்றி விடுவதாக தெரிவித்துள்ளதாக, செயல் அலுவலர் தெரிவித்துள்ளார். சன்சைடு ஆக்கிரமிப்பு 2019–ஆம் ஆண்டு முதல் உள்ளதால், பொதுப் பாதையில் போக்குவரத்து இடையூறுகள் ஏற்படுகின்றன. மேலும் இராஜப்பாளையம் வட்டாட்சியரும் சன்சைடு ஆக்கிரமிப்பை அகற்றுமாறு உத்தரவிட்டுள்ளார். எனவே, மேற்காணும் ஆக்கிரமிப்பினை உடனடியாக அகற்றிட உரிய நடவடிக்கை எடுப்பதற்கு ஆவன செய்யுமாறு இம்முறை மன்ற நடுவத்தை பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

6) எதிர்மனுதாரரான செட்டியார்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் திருமதி பா. சந்திரகலா என்பவர் 26.11.2024 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை இம்முறை மன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார் :-

"மனுதாரர் புகாராக தெரிவிக்கும் சன்சைடு ஆக்கிரமிப்பு அகற்றுவது குறித்து நில அளவையர் அளவீடு செய்து 27.05.2024 நாளிட்ட அறிக்கையில் புல எண்.428/27ல் கிழமேல் 0.2 மீட்டரும், தென்வடல் 3.4 மீட்டரும் ஆக மொத்தம் 0.68 ச.மீட்டர் மட்டுமே ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது. இதனால் பொதுமக்கள் போக்குவரத்துக்கு எவ்வித இடையூறுமின்றி அந்தரத்தில் உள்ளது என தெரிவிக்கப்பட்டது. மேற்காணும் நில அளவையர் அறிக்கையின்படி செட்டியார்பட்டி பேரூராட்சியால் 30.09.2024 அன்று ஆக்கிரமிப்பு அகற்றும் பணி நடைபெற இருந்தது. இதற்கிடையில் ஆக்கிரமிப்பாளர் மறு அளவீடு செய்யக் கோரி சிவகாசி வருவாய் கோட்டாட்சியரிடம் நேரில் சென்று முறையிட்டதில் வருவாய் கோட்டாட்சியர், இராஜபாளையம் வருவாய் வட்டாட்சியருக்கு மறு நில அளவை செய்ய வாய்மொழி உத்தரவிட்டதன் பேரில் 18.11.2024 அன்று மீண்டும் வருவாய்த் துறையின் மூலம் மறு அளவை செய்து அன்றைய தினமே இராஜபாளையம் மண்டல துணை வட்டாட்சியர் முன்னிலையில் 0.2 ச.மீ x 3.4 ச.மீ பரப்பளவில் அமையப்பெற்றிருந்த சன்சைடு ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டது என்பதனை இம்முறை மன்றத்தில் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இது குறித்து மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது" - என தெரிவித்துள்ளார்.

7) மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், மற்றும் செட்டியார்பட்டி பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

விருதுநகர் மாவட்டம், புனல்வேலி என்ற இடத்தைச் சார்ந்த மனுதாரர் திரு. இராமசுப்பிரமணியன் என்பவர் தனது 02.08.2024 நாளிட்ட முறையீட்டு மனுவில், விருதுநகர் மாவட்டம், செட்டியார்பட்டி பேரூராட்சிக்குட்பட்ட புல எண்.438/27ல் அமைந்துள்ள அரசு புறம்போக்கு பாதையில் திரு. பாலகிருஷ்ணன் என்பவர் 1 ச.மீ. பரப்பளவில் சன்சைடு அமைத்து பாதையினை ஆக்கிரமிப்பு செய்துள்ளதால் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுவதாக புகாராக தெரிவித்து, ஆக்கிரமிப்பை அகற்றக் கோரியுள்ளார்.

மனுதாரர் திரு. இரா. இராமசுப்பிரமணியன் என்பவரின் மனைவி திருமதி. இரா. மாடத்தி என்பவர் செட்டியார்பட்டி கிராம புல எண்.438/27ல் உள்ள அரசு புறம்போக்கு பாதையில் திரு. பாலகிருஷ்ணன் என்பவர் பொதுப் பாதையினை ஆக்கிரமித்து ஏணிப்படி, வாசற்படி மற்றும் சன்சைடு அமைத்துள்ளதாக பேரூராட்சியில் சமர்ப்பித்த புகாரின் அடிப்படையில், 18.11.2022 நாளிட்ட இராஜபாளையம் வட்டாட்சியரின் செயல்முறைகள் ஆணையில் திரு. பாலகிருஷ்ணன் என்பவர் ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்ட ஏணிப்படி, வாசற்படி ஆகியவற்றை அகற்றிட ஆணையிட்டபடி பேரூராட்சி செயல் அலுவலரால் ஏணிப்படி மற்றும் வாசற்படி அகற்றப்பட்டது. இந்நிலையில் ஆக்கிரமிப்பு செய்துள்ள சன்சைடை அகற்றாமல் இருப்பதற்கு திருமதி. இரா. மாடத்தி என்பவர் புகார் தெரிவித்ததைத் தொடர்ந்து 25.07.2023 நாளிட்ட இராஜபாளையம் வட்டாட்சியரின் நடவடிக்கைகள் ஆணை மூலம் சன்சைடு ஆக்கிரமிப்பை அகற்றிட பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

மேற்காணும் ஆணைப்படி ஆக்கிரமிப்பை அகற்றும் பொருட்டு இராஜபாளையம் குறுவட்ட அளவையர் மூலம் 27.05.2024 அன்று அளவீடு செய்யப்பட்டதில் சன்சைடு ஆனது 0.68 ச.மீட்டர் மட்டுமே ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட நிலையில் பொதுமக்களின் வண்டிப் பாதைக்கு எவ்வித இடையூறும் இல்லாமல் அந்தரத்தில் உள்ளது என நில அளவையர் தனது அறிக்கையை பேரூராட்சியில் சமர்ப்பித்தார்.

இதற்கிடையில் திரு. பாலகிருஷ்ணன் என்பவர் ஆக்கிரமிப்பு செய்து அமைத்துள்ள சன்சைடை அகற்றப்படாததால் மனுதார் திரு. இராமசுப்பிரமணியன் என்பவர் தனது 02.08.2024 நாளிட்ட முறையீட்டு மனுவில் இம்முறைமன்ற நடுவத்தில் புகாராக தெரிவித்துள்ளார்.

நில அளவையரின் அறிக்கைப்படி சன்சைடு ஆக்கிரமிப்பை அகற்றும் பணியானது 30.09.2024 அன்று நடைபெறவிருந்த சமயத்தில் ஆக்கிரமிப்பாளர் திரு.பாலகிருஷ்ணன் என்பவர் வருவாய் கோட்டாட்சியரிடம் முறையிட்டதன் பேரில், மீண்டும் 18.11.2024 அன்று வருவாய்த் துறையால் சன்சைடை மறு அளவீடு செய்யப்பட்டு ஆக்கிரமிப்பு உறுதி செய்யப்பட்ட நிலையில், இராஜபாளையம் மண்டல துணை வட்டாட்சியர் முன்னிலையில் 18.11.2024 அன்றே வருவாய் ஆய்வாளர் மற்றும் கிராம நிர்வாக அலுவலரால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட கீழ் மேலாக 0.2 மீட்டரும், தென்வடல் 3.4 மீட்டரும் பரப்பளவு கொண்ட சன்சைடு அகற்றப்பட்டதை பேரூராட்சி செயல் அலுவலரின் 22.11.2024 நாளிட்ட அறிக்கை மற்றும் வருவாய்த் துறை அலுவலரின் அறிக்கை மூலம் தெரிய வருகிறது.

மேற்காணும் நிலையில், செட்டியார்பட்டி பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கையை ஏற்று, இப்புகார் மனு மீதான நடவடிக்கையை இத்துடன் முடித்து வைக்கலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2024 ஆம் ஆண்டு, டிசம்பர் திங்கள் 24 ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு. இரா. இராமசுப்பிரமணியன்,
கதவு எண். 3–இ,
முருகன் ஆரம்ப பாடசாலை தெரு,
புனல்வேலி, செட்டியார்பட்டி பேரூராட்சி,
இராஜபாளையம் வட்டம், விருதுநகர் மாவட்டம் 626111

2. செயல் அலுவலர்,
செட்டியார்பட்டி பேரூராட்சி,
விருதுநகர் மாவட்டம்.

3. பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம். ஆர்.சி நகர், சென்னை – 28

4. இணைஇயக்குநர்/ஒருங்கிணைப்பு அலுவலர் ( Nodal Officer )
(பெயரிடப்பட்ட உரையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர்,
சென்னை – 28

நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
~~இகோ/உ~~திரிகள்.

// ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

சட்ட ஆலோசகர் / செயலாளர் (முகூபொ)